


https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

13TH OCTOBER 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 101




## போலி கடவுச்சீட்டுக்களுடன் மூவர் கைது

கொழும்பு, பத்தரமுல்லை – தலங்கம பகுதியில் போலி கடவுச்சீட்டுக்களை விநியோகித்து வந்த சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைத் தேடும் நபர்களுக்கு விரைவில் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுத் தருவதாக கூறி மோசடி செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

இவர்கள் போலி ஆவணங்களைத் தயாரிப்பதற்காகப் பொலிஸ் அதிகாரி ஒருவரின் பெயரில் தயாரிக்கப்பட்ட முத்திரையையும் பயன்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஏழு முக்கிய வழக்குகள் தொடர்பான விசாரணை



ஏழு முக்கிய வழக்குகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான நிஹால் தல்துவ இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்குகள் பின்வருமாறு:

– 2015ம் ஆண்டு மத்திய வங்கி பிணை முறி மோசடி

– உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்

– ஊடகவியலாளர் டி.பி சிவராம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட குற்றச்சாட்டு (ஏப்ரல் 28, 2005)

02 ➤

## நாளை சில பாடசாலைகளுக்கு விடுமுறை

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நாளை (14.10) சில பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

களனி மகா வித்தியாலயம், நீர்கொழும்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், பியகம ஆரம்ப பாடசாலை மற்றும் யபரலுவ

02 ➤

## பொதுத் தேர்தலில் 2024

# எட்டாயிரத்து 388 வேட்பாளர்கள் போட்டி

### 690 வேட்புமனுக்கள் ஏற்பு!!

### 74 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பு!!!

எதிர்வரும் பொதுத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் மொத்தமாக 8,388 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றன.

பொதுத் தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களால் 764 வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அவற்றில் 74 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன் 690 வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் உள்ள 225 ஆசனங்களுக்காக 196 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் மூலமும் 29 பேர் தேசிய பட்டியல் மூலமும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த முறை

04 ➤



## தேர்தல் பிரச்சார செலவு அறிக்கை;

# சமர்ப்பிப்பு காலம் இன்றுடன் நிறைவு



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தமது பிரச்சார செலவு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடைவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இன்றுவரை, சுமார் 20 வேட்பாளர்கள் மட்டுமே தமது பிரசார செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

02 ➤




புது சுடர்
www.puthusudar.lk
2024 OCTOBER 13 - SUNDAY

# யுக்திய தொடர வேண்டும்

அரசு நினைத்தால் எப்படிப்பட்ட குற்றச் செயல்களையும் முடிவுக்குக் கொண்டு வர முடியும்-பூஜ்ய மட்டத்துக்குக் கொண்டு வர முடியும் என்பதற்கு கடந்த டிசம்பரில் ரணில் விக்ரமசிங்கவின் அரசு மேற்கொண்ட பாதாள மற்றும் போதை பொருள் வியாபாரிகளுக்கு எதிரான யுக்திய விசேட ஒப்பரேஷன் நிரூபிக்கிறது.

அப்போதையை பொலிஸ் அமைச்சர் டிரான் அலசின் உத்தரவின் பேரில் அப்போதையை பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் நடத்தி வந்த இந்த ஆட்டத்தால் பல பாதாள உலக சந்தேக நபர்கள்-தேடப்பட்டு வந்தவர்கள்-போதைப்பொருள் வியாபாரிகள் என பலர் கைது செய்யப்பட்டனர்.பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை பொலிஸார் கைப்பற்றினர்.

அந்த அரசு முன்னெடுத்திருந்த பல திட்டங்களில் மக்களுக்கு உடன்பாடு இல்லை.காரணம் அவை எல்லாம் பொருளாதாரரீதியாக மக்களை நசுக்கக்கூடியவை. ஆனால், இந்த யுக்திய ஆட்டம் மக்களுக்கு முக்கியமானது.மக்கள் விரும்புவது.

இந்த வேலைத்திட்டத்தின்போது கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மக்களுடையவை .மக்களை போதைப்பொருளுக்கு அடிமையாக்கி அவர்களின் பணத்தைப் பெற்று வாங்கப்பட்ட சொத்துக்களும்-பணக்காரர்களை மிரட்டி கப்பமாகப் பெறப்பட்ட சொத்துக்களுமே இவை.

இவை சட்டவிரோதமான சொத்துக்கள் என்று அடையாளம் காணப்பட்டே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.உரிய விசாரணையின் பின் அந்த சொத்துக்கள் அபகரிக்கப்பட்ட சொத்துக்களாக இருந்தால் அவை உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மிகுதி சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட வேண்டும். அல்லது போதை பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டு வருபவர்களின் செலவுக்கு வழங்கப்பட வேண்டும்.அதுதான் சரியானது.காரணம்,அவர்களை போதைக்கு அடிமையாக்கி அதன்மூலம் ஈட்டப்பட்ட சொத்துக்கள்தானே.

அநுரவின் அரசு இந்த செயற்பாட்டை தொடர வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். இல்லாவிட்டால் மீண்டும் பழைய இடத்துக்கே நிலைமை சென்றுவிடும்.அதனால் எந்த நன்மையையும் இல்லை.

இதற்கு இறுதி முடிவு கட்டும் வரை-போதைப்பொருள் வியாபாரத்தை-பாதாள குழுக்களை முற்றாக ஒழிக்கும்வரை அக்ஸன் தொடர வேண்டும்,

அரசு மனது வைத்தால்-பொலிஸார் மனது வைத்தால் குறுகிய காலத்துக்குள் இதை ஒழித்துவிடலாம் என்பதை இந்த 6 மாத ஆட்டம் நிரூபிக்கிறது.

அரசுக்கு தேவையென்றால் தொடங்குதல்,இல்லாவிட்டால் இடையில் நிறுத்திவிடுதல் என்பதுதான் இப்போதுவரையும் உள்ள நடைமுறை.

அதற்குக் காரணம் அரசின் சில அமைச்சர்களின்-எம்பிக்களின்-பொலிஸ் அதிகாரிகளின் கூட்டாளிகளாக இந்த போதை வியாபாரிகளும் பாதாள குழுக்களும் இருப்பதுதான்.

அவர்களின் அழுத்தம் காரணமாகவே ஒப்பரேஷன் இடையில் நிறுத்தப்படுகிறது. பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். பழைய படிமேல் வர்த்தகம்-அடாவடி தொடர்கின்றன.

இந்த நிலைமை இனியாவது-அநுரவின் ஆட்சியிலாவது மாற வேண்டும்.நாட்டு மக்கள்-இளம் சமூதாயம் இந்த போதைப்பொருளால் சீரழிந்துகொண்டு செல்கிறார்கள்.

பல குடும்பங்கள் சீரழிந்து நடுத் தெருவுக்கு வருகின்றன.பணக்காரர்கள் பிச்சைக்காரர்களாக மாறுகின்றனர்.இந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த போதை பொருள் பாவனை மக்களுக்கு மேலும் சுமையாகும்.

ஆகவே,போதைப்பொருள் -பாதாள ஒழிப்பு நடவடிக்கையை வெறும் சில மாதங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தாது அவர்களை ஒழித்துக்கட்டும்வரை தொடர வேண்டும்.

முக்கியமாக,இவ்வாறான ஒப்பரேசனுகள்பற்றி முன்கூட்டியே அறிவிப்பதை பொலிஸார் நிறுத்த வேண்டும்.அது குற்றவாளிகள் தப்பிப்பதற்கு வழிவகுக்கும்.

## தேர்தல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின்படி, ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 21 நாட்களுக்குள் வேட்பாளர்கள் தங்களது செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

இதுவரை செலவு அறிக்கையை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ மற்றும் ஜனக ரத்நாயக்க உள்ளிட்ட 20 பேர் சமர்ப்பித்துள்ளனர்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கு மொத்தம் 38 வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

அனைத்து வேட்பாளர்களும் தங்கள் அறிக்கைகளை இன்று பிற்பகல் 3 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

இந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறினால், ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டால், ஒரு வேட்பாளர் தனது வாக்குரிமை மற்றும் பதவியையும் இழக்க நேரிடும், மேலும் நீதிமன்றத்துக்கு அபராதமாக ரூ. 100,000 செலுத்த வேண்டும் எனவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

## ஏழு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**லலித்குமார் மற்றும் குகன் முருகானந்தன் காணாமல் போனமை (டிசம்பர் 9, 2011)**

**– 2006இல் துணைவேந்தர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் காணாமல் போனமை**

**– தினேஷ் ஷாப்டரின் மரணம்**

**– வெலிகமவில் உள்ள W15 ஹோட்டலுக்கு வெளியே இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவம்**

## நாளை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆனந்த கனிஷ்ட வித்தியாலயம் ஆகியவற்றுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.







# ரணிலின் பிடியில் சிக்குவாரா சஜித்?

நாட்டில் இப்போது ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது.பல நல்ல எதிர்பார்ப்புகளோடு மக்கள் இந்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். அந்த எதிர்பார்ப்புகளை அனுபவிப்பதற்காக மக்கள் இப்போது காத்துகொண்டு இருக்கின்றனர்.

ஜனாதிபதி தேர்தலில் அனுரகுமார திஸநாயக்கவை வீழ்த்துவதற்கு ரணில் மற்றும் சஜித் தரப்பு எவ்வளவு முயற்சி எடுத்தபோதிலும் அது முடியவில்லை.இறுதியில் அனுரவே ஜனாதிபதியாகிவிட்டார்.

அடுத்து நாடாளுமன்றத் தேர்தலிலாவது அனுரவை வீழ்த்த வேண்டும்நாடாளுமன்ற ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்று அதே தரப்பு முயற்சி செய்கிறது.

ரணிலையும் சஜித்தையும் இணைத்தால் அனுரவை இலகுவாக வீழ்த்தலாம் என்று நினைத்துக்கொண்டு இவர்கள் இப்போது இருவரையும் இணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

2019 ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய மொட்டு கட்சியின் வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிடுவதென்றால் அது ரணிலால் முடியாது.சஜித்தாலேயே முடியும் என்று மக்கள் கருதியதால் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் சஜித் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

கோத்தா 69 லட்சம் வாக்குகளை பெற்று வெற்றிபெற்றபோதிலும், சஜித்தால் 55 லட்சம் வாக்குகளையேனும் பெற முடிந்தமை அன்றைய காலகட்டத்தில் பெரிய விடயம் என்றே சொல்ல வேண்டும்.

2024 ஜனாதிபதி தேர்தலில் சஜித் அனுரவிடம் தோல்வியடைந்த போதிலும் ரணிலை விடவும் சஜித்துக்கு மக்கள் செல்வாக்கு அதிகம் என்பதை சஜித் நிரூபித்துள்ளார்.

இந்த நிலையில்,சஜித் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதானது ரணிலுக்குத்தான் நன்மையே தவிர சஜித்துக்கு அல்ல.

சஜித் இணைந்தால் சஜித்துக்கு என்ன நடக்கும் என்று எல்லோருக்கும் தெரியும்.சஜித்தை அருகில் எடுத்து அப்படியே அழித்துவிடுவார் ரணில்.

தன்னை ஜனாதிபதியாக்கிய மொட்டு கட்சிக்கு அவர் செய்வதைப் பாருங்கள். அந்தக் கட்சியை இரண்டு,மூன்று துண்டுகளாக உடைத்துவிட்டார்.அதில் பெரிய துண்டை தன்னோடு இணைத்துக்கொண்டுதான் இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார் ரணில்.

இப்படி தன்னை ஜனாதிபதியாக்கிய கட்சிக்கே துரோகம் செய்யும் ரணில் ,தன்னை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோற்கடித்த சஜித்தை மாத்திரம் விட்டுவைப்பாரா?

சஜித்தின் வளர்ச்சி ரணிலுக்கு என்றுமே ஆபத்துதான்.இதனால் சஜித்தை அருகில் எடுத்து அழிப்பதுதான் ரணிலின் திட்டம்.

இந்தத் திட்டத்துக்கு சஜித் என்றுமே துணைபோகமாட்டார். தனது கழுத்தை அறுக்கும் கத்தியை அவரே தீட்டிக் கொடுப்பாரா?

சஜித்தும் ரணிலும் இணைந்தால் நாடாளுமன்ற ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்பது வெறும் கனவுதான்.

புதிய ஜனாதிபதி அனுரவின்ஆட்சி முறைமை இப்போது அவருக்கு வாக்களிக்காத மக்களைக்கூட கவர்ந்துள்ளது.இதனால் அனுரவின் கட்சியை நாடாளுமன்றத் தேர்தலில் வீழ்த்துவது கஷ்டம்தான்.

இந்த அரசு ஆகக்குறைந்தது 120 ஆசனங்களை எடுக்கும் என்று இந்த அரசுக்கு எதிரான உதய கம்மன்பிலவே கூறியுள்ளார்.

ஆனால்,அரசின் எதிர்பார்ப்போ மூன்றில் இரண்டு பெரும்பான்மையாகும். அதற்கு ஏற்பவே அரசு காய் நகர்த்துகிறது.

அரசின் தற்போதைய வேலைத் திட்டங்கள் மூன்றில் இரண்டைப் பெற்றுத் தரும் என்றே தெரிகிறது.

குறிப்பாக, விவசாயிகளுக்கு 25 ஆயிரம் ரூபா உர மானியம் என்ற அரசின் அறிவிப்பானது மூன்றில் இரண்டைப் பெற்றுத்தரும் ஓர் யுக்தியாகும்.

இதுபோல் மேலும் பல திட்டங்கள் மக்களைக் கவர்ந்துள்ளன. இவையெல்லாம் அரசுக்கு வெற்றிமேல் வெற்றியைக் குவிக்கும் எனலாம்.

ஆகவே,ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் கூட்டணி அமைத்தால்கூட நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிக்க முடியாது என்பதுதான் தற்போதைய அரசியல் நிலைமை.

இந்தக் கூட்டணியை அமைப்பதற்கான முதற்கட்ட முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் உள்ளது.இருந்தாலும்,மேலும் முயற்சிகள் தொடர்ந்த வண்ணம்தான் உள்ளன.

அவையும் வெற்றிபெறுவதற்கு வாய்ப்பில்லை.இந்த விடயத்தில் சஜித் மிகவும் அவதானமாக இருப்பதைக் காணலாம்.



# Cinnamon Life at City of Dreams Sri Lanka

# சொகுசு ஹோட்டல் வசதியை அறிமுகம் செய்யும் ஜோன் கீல்ஸ்



ஜோன் கீல்ஸ் நிறுவனத்தினால் 1.2 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான முதலீட்டில் கட்டப்பட்ட ஊயைெஅழெ டுகைந யவ ஊவைல ழக னுசநயஅள ளுசை டுயமெய சொகுசு ஹோட்டல், 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது. இலங்கையில் தனியார் துறையின் மிகப்பெரியதும் மற்றும் நம்பிக்கைக்குரிய முதலீடாகவும் குறிப்பிடப்படக்கூடிய இந்த ஹோட்டல் ஆனது, வர்த்தகம், ஓய்வு மற்றும் பொழுதுபோக்கிற்காக தெற்காசியாவில் மிகவும் செல்வாக்கு மிக்க சுற்றுலாத் தலமாக நாட்டின் சுற்றுலாத் துறைக்கு புதிய திருப்புமுனையாக அமையும்.

687 ஆடம்பர அறைகளைக் கொண்ட ஊயைெஅழெ டுகைந யவ ஊவைல ழக னுசநயஅள ளுசை டுயமெய சொகுசு ஹோட்டலில், பால்ரூம்கள், ஈபைா-வநஉா நிகழ்வுகள் மற்றும் மாநாட்டு நிகழ்வுகள் போன்ற தனித்துவமான வசதிகளுடன், ஒரே நேரத்தில் வெவ்வேறு தளங்களில் 5,000 க்கும் மேற்பட்ட விருந்தினர்களை உள்ளடக்கவும் அவர்களுக்கான சேவைகளை பெற்றுக்கொள்ளவும் முடியும் என்பது சிறப்பம்சமாகும். சர்வதேச மாநாடுகள் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய பெரிய அளவிலான நிகழ்வுகளை கொழும்பில் மிகப்பெரிய நிகழ்வு அரங்காக ஏற்பாடு செய்யும் வசதியை வழங்குவதால், உலகளாவிய ஆஐஊநு சுற்றுப்பயணங்களுக்கான முன்னணி இடமாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஹோட்டலுக்கு வரும் விருந்தினர்கள் அனைவருக்கும் சுவையான உணவு மற்றும் பானங்களை வழங்குவதற்காக 250 சமையல் கலை நிபுணர்களுடன் 1,500 க்கும் மேற்பட்ட சேவை நிபுணர்களைக் கொண்ட குழு அர்ப்பணிப்புடன் செயற்படும். இங்கே, சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தவொரு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உணவு வகைகளின் சுவையான அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பும் உள்ளதுடன், குறிப்பாக உாஉை குசநஉா டிளைவசழவிலிருந்து யுஅநசஉையெ பசடைட வரை.. அதுமட்டுமின்றி, ஆடம்பர முறையில் உருவாக்கப்பட்ட ஷாம்பெயின் மற்றும் கொக்டெய்ல் பார் ஆகியவற்றுடன் தங்களுக்குப் பிடித்த வைன் (ுநைெள) வகைகளையும் தேர்ந்தெடுக்கும் பார் வசதிகள் மூலம் மறக்க முடியாத அனுபவத்தை பெற்றுக்கொள்ளவும் முடியும். இதற்கு மேலதிகமாக, ஊயைெஅழெ டுகைந தனது வாடிக்கையாளர்களுக்கு மேலும் பல ரக ஆகார அனுபவங்களை வழங்குவதற்கு எதிர்வரும் மாதங்களில் பல புதிய உணவகங்களின் வருகையுடன் அனைவருக்குமான அனுபவத்தை மேம்படுத்தும் என்பது உறுதி. மேலும், ஹோட்டல் வளாகத்தில் அமைந்துள்ள பார்ப்பவர்களை வசீகருக்கும் அழகுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இடங்களில் திருமண நிகழ்வுகள் மற்றும் பிற சிறப்பு நிகழ்வுககளை ஒழுங்கமைக்க வாய்பினை தருவதால் இது கொழும்பில் அனைவருக்குமான சிறந்த புகலிடமாக இருக்கும்.

15ஆம் திகதி திறக்கவிருக்கும் ஊயைெஅழெ டுகைந யவ ஊவைல ழக னுசநயஅள ளுசை டுயமெயவின் ஒரு மாபெரும் நிர்மாணத்திற்கான இறுதிக் கட்ட பணியாக , ஷொப்பிங் மற்றும் கேமிங் வசதிகளைக் கொண்ட பொழுதுபோக்கு வளாகம் மட்டுமன்றி 113 அறைகளைக் கொண்ட அதி சொகுசு 'ரேறய' ஹோட்டல் வசதியை 2025ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் திறக்கவும் ஜோன் கீல்ஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் திரு. கிருஷான் பாலேந்திரா, "ஜோன் கீல்ஸைப் போன்று இலங்கையிலும் இத்திட்டம் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும்." என தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "'ஊவைல ழக னுசநயஅள ளுசை டுயமெய' ஒரு தசாப்தத்திற்கு முன்னர் உருவாக்கப்பட்ட ஒரு அற்புதமான திட்டமாக சுட்டிக்காட்ட முடியும். ஷாப்பிங் மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகள் போன்ற வசதிகள் மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் போன்ற வசதிகள் மூலம் இந்த வசதி கொழும்பில் ஓய்வு மற்றும் பொழுதுபோக்கிற்கான மிகவும் கவர்ச்சிகரமான இடமாக மாற்றும் என்பது எனது நம்பிக்கை. தெற்காசியாவில் மேம்படுத்தும் திட்டமாக, இலங்கையில் சுற்றுலாத் தேவை, அந்நிய செலாவணி வருவாய் மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றுக்கு இது பெரும் ஆதரவாக இருக்கும் என்று நம்புகிறோம். இத்திட்டம் முழுமையாக நிறைவடைந்தவுடன், 20,000க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் மூலம் இலங்கை சமூகத்துடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு ஏற்படும். இலங்கையை பிராந்திய மற்றும் உலகளாவிய சுற்றுலா சந்தையில் முன்னணிக்கு கொண்டுவருவதற்கான குழுவின் பரந்த மூலோபாயத்தின் படிகளில் ஒன்றாகவும் இதைக் குறிப்பிடலாம். இவ்வகையான பெரிய அளவிலான திட்டங்களுக்கு தலைமை தாங்குவது, நிலையான வளர்ச்சியை அடைவதற்கான ஜோன் கீல்ஸ் குழுமத்தின் பெரும் அர்ப்பணிப்பை தெளிவாக வலியுறுத்துகிறது." என தெரிவித்தார்.

ஊயைெஅழெ டுகைந யவ ஊவைல ழக னுசநயஅள ளுசை டுயமெய, கொழும்பின் நகர மத்தியில் ஒரு தனித்துவமான இடத்தில் அமைந்துள்ளது, இது நாட்டின் புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர்களின் திறன்களை 1000 க்கும் மேற்பட்ட பழமையான கலைப் படைப்புகளைக் கொண்ட கலைக்கூடத்துடன் காட்சிப்படுத்துகிறது. கலையில் இலங்கைக்குரிய பன்முகத்தன்மையையும் சிறப்பையும் வெளிப்படுத்தும் இந்த கலைப்படைப்புகளின் தொகுப்பு, கலைப் பாரம்பரியத்தைப் போற்றும் மற்றும் பாதுகாக்கும் முயற்சி என்றும் கூறலாம்.

அதன்படி, ஊயைெஅழெ டுகைந யவ ஊவைல ழக னுசநயஅள சுற்றுலாப் பயணிகளுக்கு கொழும்பு நகரில் ஒரு சிறந்த அனுபவத்தை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குகிறது, மேலும் தங்கும் வசதிகளுக்கு அப்பால் பொழுதுபோக்கு, கலை, ஃ பேஷன் மற்றும் உணவு வகைகளை அனுபவிப்பதற்கான சரியான வாய்ப்பை வழங்குகிறது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி முதல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் அனைத்து பார்வையாளர்களும் ஊயைெஅழெ டுகைந யவ ஊவைல ழக னுசநயஅளக்கு வந்து இந்த சேவைகளை அனுபவிப்பதுடன் வாழ்வில் மறக்க முடியாத இனிமையான நினைவுகளையும் தங்களுடைய வாழ்க்கையில் சேர்க்க முடியும்.



## பொதுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவாக வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். 18 ஆசனங்களுக்காக 966 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கம்பஹா மாவட்டத்தில் 19 ஆசனங்களுக்காக 902 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்த முறை பொதுத் தேர்தலில் அதிக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைக் கொண்ட திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்கு 640 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அதேபோன்று புத்தளம் மாவட்டத்தில் 08 உறுப்பினர்களுக்காக 429 வேட்பாளர்கள் 24 அரசியல் கட்சிகள் 15 சுயேட்சை குழுக்கள் ஊடாகவும் வன்னி மாவட்டத்தில் 06 உறுப்பினர்களுக்காக 423 வேட்பாளர்கள் 22 அரசியல் கட்சிகள் 25 சுயேட்சை குழுக்கள் ஊடாக போட்டியிடுகின்றனர்.

மொனராகலை மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்கு 135 பேரும், பொலன்னறுவை மாவட்டத்தில் 5 ஆசனங்களுக்கு 120 பேரும் போட்டியிடுகின்றனர்.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மொனராகலை மற்றும் பொலனறுவை ஆகிய இரண்டு மாவட்டங்களிலேயே குறைந்தளவான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அரிசி–காசி கொடுத்து வருவதல்ல ஆட்சி மாற்றம்





தோழர் அனுரவின் வெற்றி என்பது தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு கணிக்கப்பட்ட ஒன்றல்ல.

என்று கோத்தாவின் ஆட்சி ஆட்டங்காணத் தொடங்கியதோ அன்றே நிமிரத் தொடங்கியது அனுரவின் தலை.

அன்று இதை யாரும் கண்டுகொள்ளவில்லை.

ஆனால்,குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டாமல் பரந்த ஆய்வுக் கண்ணோட்டத்தோடு வேலை செய்யும் ஊடகவியலாளர்களுக்கு புரிந்தது அடுத்த ஜனாதிபதி அனுரதான் என்று.

"கோட்டா கோ ஹோம்" போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது அது உறுதியானது.

அதனைத் தொடர்ந்து பல்வேறு முக்கிய தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட இரகசிய ஆய்வில் எல்லாம் அனுரவின் செல்வாக்கு அதிகரித்து வந்ததை அவதானிக்க முடிந்தது.

ரணில் ஜனாதிபதியாகி வரிசை யுகம் நீக்கப்பட்டதும் அனுரவின் செல்வாக்கு சரியத் தொடங்கிவிட்டது என்று பலரும் கருதினர்.

ஆனால்,அந்த வரிசை யுக நீக்கம் என்ற மாயை தெற்கில்–சிங்கள ஊர்களில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று களத்தில் நின்று ஆராய்ந்து பார்த்த எமக்குப் புரிந்தது அந்த வரிசை யுகம் நீக்கம்தான் அனுரவின் எழுச்சிக்கே வித்திட்டது என்று.

அரசியல் மாற்றம் – ஆட்சி மாற்றம் என்பது அரிசி பேக்கும் 1500 ரூபா காசும் கொடுத்து வருவதல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். சரியான அரசியல் கொள்கையை வைத்துத்தான் அந்த மாற்றம் ஏற்படும்.

பழைய அரசியல்வாதிகளால் மக்கள் அதிருப்தி அடைந்திருந்தனர். அவர்கள் அடித்த கொள்ளை,புரிந்த ஊழல்கள் எல்லாம் மக்களின் மனங்களில் பெரும் கோபத்தை ஏற்படுத்தியிருந்தது.

இனிமேலும் இவர்களிடம் ஏமாற முடியாது!இனியும் இவர்கள் திருடுவதற்கு இடம் கொடுக்க முடியாது என்று தீர்மானித்த மக்கள் அந்தத் திருடர்களுக்கு தக்க பதிலை வழங்கினர்.

மக்களின் பார்வையில் நல்லவர்களாக– நேர்மையானவர்களாக– ஊழலற்றவர்களாகத் தெரிந்தது ஜேவிபிதான். அதனால்தான் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அனுரகுமார திஸநாயக்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளனர்.

வழமைபோல் இந்த ஊழல் அரசியல்வாதிகள் மக்களுக்கு லஞ்சம் கொடுத்து வெல்லலாம் என்று கணக்குப் போட்டனர்.

அரிசி பேக்குகளும் காசும் கொடுத்து மக்களை பஸ்களில் ஏற்றி அவர்களின் தேர்தல் பிரச்சாரங்களுக்கு அழைத்துச் சென்றனர்.அவர்களின் கூட்டங்களுக்கு அதிக மக்கள் வருவதாக நாட்டுக்கு காட்டினார்.

ஆனால்,சில ஏழை மக்கள் அந்த பணத்தையும் அரிசி போக்குகளையும் பெற்றுக்கொண்டு அந்தக் கூட்டங்களுக்குச் சென்றனர்.

அவர்கள் கூட்டங்களுக்கு மட்டும்தான் சென்றனர். வாக்குப் போடவில்லை.அவர்கள் வாக்களித்ததோ காசி– அரிசி எதுவும் கொடுக்காத அனுரவுக்கு.

காசி – அரிசி எல்லாம் கொடுத்து வெல்ல முடியாது என்பதை மக்கள் நிரூபித்துள்ளனர்.

மக்களின் தேவை ஒரேயொரு தடவை மாத்திரம் கொடுக்கும் அந்த அரிசியோ காசோ அல்ல.என்றும் நிலைத்து நிற்கக்கூடிய குறைந்த வாழ்க்கை செலவீனம்,ஊழலற்ற ஆட்சி,எளிமையான ஆட்சி,மக்களின் பணத்தை வீண் விரயம் செய்யாத ஆட்சி,மக்களின் பணத்தை கொள்ளையடிக்காத ஆட்சிதான் என்றும் கூறியுள்ளனர்.

அந்த ஆட்சியை ஒருபோதும் ரணிலாலும் சஜித்தாலும் வழங்க முடியாது என்பதை உணர்ந்த மக்கள் அனுரவாலயே வழங்க முடியும் என்று நம்புகின்றனர்.

அதனால்தான் சிறு சிறு சலுகைகள் எல்லாவற்றையும் தூக்கி வீசிவிட்டு மக்கள் கொள்கையின் பின்னால் ஒன்றிணைந்துள்ளனர் .

# ஷங்கிரி-லாவுக்கு விருதுகள்






ஷங்கிரி-லா ஹம்பாந்தோட்டை 8வது **South Asian Travel Awards (SATA)** 2024 நிகழ்வில் இரு மதிப்புமிக்க விருது அங்கீகாரங்களைச் சம்பாதித்து வெற்றியை நிலைநாட்டியுள்ளது.

2024 செப்டெம்பர் 20 வெள்ளிக்கிழமையன்று **Aloft Kathmandu Thamel** இல் இடம்பெற்ற விமரிசையான நிகழ்வில் 200 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன், தெற்காசியாவின் பிரயாண மற்றும் விருந்தோம்பல் துறையில் மிகச் சிறந்தவற்றை வெளிக்காண்பித்தவாறு, பல்வகைப்பட்ட பிரிவுகளில் விருது அங்கீகாரங்களுக்கு பெயரிடப்பட்ட 400 க்கும் மேற்பட்டவர்களுக்கு இந்நிகழ்வில் கௌரவமளிக்கப்பட்டுள்ளது. ஷங்கிரி-லா ஹம்பாந்தோட்டை, இலங்கையிலுள்ள முன்னணி குடும்ப உல்லாச விடுதி (**Leading Family Resort in Sri Lanka**) மற்றும் இலங்கையிலுள்ள முன்னணி திருமண நிகழ்வு உல்லாச விடுதி (**Leading Wedding Resort in Sri Lanka**) ஆகிய விருதுகளைத் தனதாக்கியுள்ளது.

விருந்தோம்பலில் மகத்துவத்தின் மீது இந்த உல்லாச விடுதி கொண்டுள்ள ஓயாத அர்ப்பணிப்பிற்கு இந்த விருது அங்கீகாரங்கள் சான்று பகருகின்றன. அதன் திறமைமிக்க அணியின் கடின உழைப்பு மற்றும் மறக்க முடியாத குடும்ப விடுமுறைகள் மற்றும் கனவுகள் நனவாகும் திருமண நிகழ்வுகளுக்கான இடம் ஆகியவற்றுக்காக ஷங்கிரி-லா ஹம்பாந்தோட்டை தொடர்ந்தும் நாடுகின்ற விருந்தினர்களின் விசுவாசம் ஆகியனவே இவ்விருது அங்கீகாரங்களுக்கான உந்து சக்தியாக அமையப்பெற்றன.

# ஈவாவின் புதிய நிகழ்ச்சித்திட்டம்



இலங்கையின் முன்னணி சானிட்டரி நாப்கின் வர்த்தக நாமமான ஈவா, கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸுடன் இணைந்து 'மகஹருனு பாடம்' என்ற தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 'ஈவா தனமுத்து தரு – தனகெனம லொகுவேமு' என்ற தலைப்பில் மாற்றியமைக்கும் கல்வி முயற்சியை தொடங்கியுள்ளது.

'ஈவா தனமுத்து தரு – தனகெனம லொகுவேமு' முயற்சியானது, நாடெங்கும் உள்ள 3,000க்கும் மேற்பட்ட பெண்கள் பாடசாலைகளில் பெண்களின் ஆரோக்கியம், பருவமடைதல், இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் மாதவிடாய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒக்டோபர் 1 ஆம் திகதி 'மகஹருனு பாடம்' நிகழ்ச்சியின் ஆரம்பவிழா, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றது.

# OrphanCare அமைப்புக்கு பங்களிப்பு




முன்னணி பேக்கரி மற்றும் பேஸ்ரி விற்பனைத் தொடரான **Caravan Fresh** உடன் **OrphanCare** பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, அநாதரவான சிறுவர்கள் 18 வயதை எய்தி, காப்பகத்திலிருந்து வெளியேறியதும், தமது வாழ்வில் இரண்டாவது தடவையாகவும் அநாதரவாக்கப்படுவதை தவிர்க்கும் **OrphanCare** இன் திட்டத்துக்கு ஆதரவளிக்கப்படும். இந்தப் பங்காண்மையின் அங்கமாக, 550 கிராம் வெட்டப்பட்ட பாண் விற்பனையினூடாகவும் ரூ. 10 ஐ நேரடியாக **OrphanCare** நிதியத்துக்கு பங்களிப்பு வழங்க **Caravan Fresh** முன்வந்துள்ளது. இந்தப்பங்களிப்பினூடாக, அநாதரவான சிறுவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் முக்கிய பங்காற்றும். கல்வியை அணுகுவது, திறன் விருத்தி மற்றும் பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொள்வது போன்றவற்றிலும் பங்களிப்புச் செலுத்தும். **Caravan Fresh** மற்றும் **OrphanCare** இடையிலான இந்த பங்காண்மை என்பது வரவேற்கத்தக்க நகர்வாக அமைந்துள்ளது. அநாதரவான இளைஞர்களுக்கு வலுவூட்டும் நிதியத்தின் முயற்சிகளுக்கு **Caravan Fresh** இன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

# சர்வதேச இலங்கைக் காப்புறுதி உச்சி மாநாட்டில் AIA குழுமத்தின் சுகாதாரப் பணிப்பாளர்




**AIA** குழுமத்தின் சுகாதாரப் பராமரிப்புப் பணிப்பாளர் னுச .கிறிஸ்டியன் வார்ட்ஸ் சமீபத்தில் ஷங்ரிலா கொழும்பில் நடைபெற்ற சர்வதேச இலங்கைக் காப்புறுதி உச்சி மாநாடு 2024 இல் உரையாற்றியிருந்தார்.

இன்றைய சிக்கலான மற்றும் மாற்றங்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலில் காப்புறுதி வழங்குநர்களின் வளர்ச்சியடைந்து வரும் பங்கினைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக உலகளாவிய தொழில்துறைத் தலைவர்கள், காப்புறுதித் திட்ட வல்லுநர்கள் மற்றும் தொழில்துறை நிபுணர்கள் ஆகியோர் 'சவால்கள் மற்றும் புதுமையான மாற்றங்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலில் காப்புறுதி வழங்குநர்களின் பங்கு' என்ற கருப்பொருளில் இங்கு ஒன்றுகூடி இருந்தனர்.

வார்ட்ஸ் ஆரோக்கியக் காப்பீடு, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரச் சேவைகள் உட்பட சுகாதாரப் பராமரிப்புத் துறையில் 25 வருடங்களுக்கும் அதிகமான சர்வதேச அனுபவத்துடன் 'வளர்ந்து வரும் பிராந்தியப் போக்குகள் மற்றும் டிஜிட்டல் தழுவலுடன் வைத்தியக் காப்பீட்டின் எதிர்காலம்' பற்றிய தனது உள்ளார்ந்த அறிவினையும் இதன்போது பகிர்ந்து கொண்டிருந்தார். அவரது விளக்கக்காட்சி தொழில் துறையினை மாற்றியமைக்கும் முக்கிய போக்குகளை எடுத்துக்காட்டி இருந்ததுடன் பெறுமதி அடிப்படையிலான சுகாதாரப் பாதுகாப்பு, டிஜிட்டல் தீர்வுகளின் முக்கியத்துவம் மற்றும் சுகாதார இடர் நிர்வாகத்தை மேம்படுத்துவதில் பகுப்பாய்வு உள்ளறிவு மற்றும் வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்தி வழங்குவதற்காக சுகாதாரக் காப்புறுதியினை ஆரோக்கியப் பராமரிப்புச் சேவை விநியோகத்துடன் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியிருந்தது.

# நீண்ட சேவைக் கால ஊழியர்களுக்கு வருடாந்த விசுவாச விருது



இலங்கையிலுள்ள முன்னணி நெசவுத் துணி உற்பத்தி நிறுவனமான **Ocean Lanka (Pvt) Ltd**, அண்மையில் இடம்பெற்ற பெருமைக்குரிய **"Sewa Abhiman" Loyalty Awards** ("சேவா அபிமன்" விசுவாச விருதுகள்) விழாவில் தனது ஊழியர்களின் உறுதியான அர்ப்பணிப்பை கௌரவித்துக் கொண்டாடியது. மாலபேயில் உள்ள ரீஜண்ட் கன்ட்ரி கிளப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், 10 மற்றும் 20 வருடங்களாக நிறுவனத்தில் தொடர்ச்சியாக சேவையாற்றி வரும் ஓஷன் லங்காவின் பணியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்புகளுக்கு கௌரவமளிக்கப்பட்டது.

இவ்வருடம் இடம்பெற்ற விழாவில் மொத்தமாக 57 பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதில் 23 பேர் தமது 10 வருட சேவைக்காகவும், 34 பேர் தமது 20 வருட கால பணிக்காகவும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்த மைல்கல்லானது, தனது பணியாளர்களிடையே **Ocean Lanka** வளர்த்து வரும் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை எடுத்துக் காட்டுகிறது. ஒரு சாதகமான மற்றும் பலனளிக்கும் பணிச்சூழலை ஏற்படுத்துவதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கிறது.

# SLIIT இன் கட்டடக்கலை MSc



உலகளாவிய கட்டடக்கலையின் தலைமைத்துவத்திற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில் நவீன தொழில் நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ள சட்டப்பின் படிப்புப் பட்டமான **SLIIT** இன் கட்டடக்கலை **MSc** பட்டக் கல்வி **SLIIT** நிறுவனத்தின் கட்டடக்கலைப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கட்டடக்கலைத் துறையில் அதிகரித்துவரும் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் **SLIIT** இன் கட்டடக்கலை **MSc** பட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. **PhD** மட்டத்தில் மேலும் ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் தேவையான தயார்ப்படுத்தல்களையும் பட்டதாரிகள் பெற்றுக்கொள்வார்கள்.

இரண்டு வருடத்தைக் கொண்ட இந்த முதுமானிப் பட்டமானது புகழ்பெற்ற ஐக்கிய இராச்சியத்தின் ஜோன் மூர்ஸ் பல்கலைக்கழகத்துடன் (**LJMU**) இணைந்து வழங்கப்படுகின்றது.

இந்தக் பட்டக் கல்வித்திட்டமானது **Royal Institute of British Architects (RIBA)** இன் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதுடன், இலங்கை கட்டடக்கலை நிறுவனத்தின் **Candidate Program** திட்டத்துக்கான அந்தஸ்தையும் பெற்றுள்ளது.

அத்துடன், இன் கட்டடக்கலைப் பிரிவானது சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. **Global INSPIRELI World Architecture University** தரப்படுத்தல் 2022-2023 இல் இதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்தப் பிரிவானது உலகளாவிய ரீதியில் முதல் 100 நிறுவனங்களுக்குள் காணப்படுவதுடன், உலகரீதியாக உள்ள 1320 நிறுவனங்களில் 22 வது இடத்தைப் பிடித்துள்ளது.

# மஹிந்திரா ஐடியல் ஃபைனான்ஸின் புதிய முகாமைத்துவப் பணிப்பாளர்



**Mahindra Finance**இன் துணை நிறுவனமான **Mahindra Ideal Finance Limited (MIFL)** புதிய முகாமைத்துவப் பணிப்பாளராகவும், பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் திரு. முஃபத்தல் சுனியாவை நியமிப்பதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

**MIFL** இன் பிரதம நிறைவேற்று அதிகாரியாக முன்னர் பணியாற்றிய திரு. துமிந்த வீரசேகர ஓய்வுபெற்றதை அடுத்து, அந்த வெற்றிடத்திற்கு திரு. முஃபத்தல் நியமிக்கப்பட்டுள்ளார். தனது புதிய நியமிப்பில், திரு. முஃபத்தல், குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் (**SME**கள்) மற்றும் கிராமப்புற மக்களுக்கு **MIFL** இன் டிஜிட்டல் கடன் வழங்கும் திறன்களை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தவுள்ளார். மேலும் நிறுவனத்தின் வாடிக்கையாளர் மதிப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் நிறுவனத்தின் சேவைகளை மேலும் விரிவுபடுத்த அவர் எதிர்பார்த்துள்ளார்.

இந்த நியமனம் குறித்து **Mahindra Finance** நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான **Raul Rebello** கூறுகையில், "முஃபத்தல் மஹிந்திரா குழுமம் மற்றும் **Mahindra Finance** ஆகியவற்றில் பல்வேறு தலைமைப் பதவிகளை வகித்துள்ளார். இலங்கையில் ஒரு வலுவான நிதிச் சேவை வர்த்தகத்தை கட்டியெழுப்ப துமிந்தவின் பங்களிப்புக்காக நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன், மேலும் எதிர்காலத்தில் **MIFL** இன்னும் பெரிய வெற்றியைப் பெற முஃபத்தலின் அனுபவம் உதவும் என்று நான் நம்புகிறேன்." என தெரிவித்தார்.

ஆயாவைனெசய **Ideal Finance** நிறுவனத்தின் தலைவர் திரு. நளின் வெல்கம கருத்து தெரிவிக்கையில், "சர்வதேச அனுபவத்தைக் கொண்ட முஃபத்தல் நிறுவனத்துடன் இணைந்து கொள்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். நிதித் துறையைப் பற்றிய அவரது விரிவான அறிவு, சந்தையில் வளரவும் வெற்றிபெறவும் புதிய வழிகளைக் கண்டறிய நிறுவனத்திற்கு உதவும்." என தெரிவித்தார்.



# DFCC வங்கிக்கு விருதுகள்

டிஜிட்டல் புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வங்கிச்சேவை தீர்வுகள் ஆகியவற்றில் முன்னோடியான **DFCC** வங்கி, **LK Domain Registry** ஆல் நடத்தப்பட்ட 14வது **BestWeb.LK Awards** 2024 விருதுகள் நிகழ்வில் வெற்றியீட்டியுள்ளது.

மிகச் சிறந்த வங்கிச்சேவை இணையத்தளத்திற்கான (**Best Banking Website**) பெருமதிப்பிற்குரிய தங்க விருது மற்றும் வங்கிச்சேவைப் பிரிவில் மிகச் சிறந்த மொபைல் பயனர் அனுபவத்திற்கான (**Best Mobile User Experience in the Banking Category**) சிறப்பு விருது ஆகியவற்றை வென்று இவ்வங்கி வரலாறு படைத்துள்ளது.

மேலும், இந்த வெற்றிகளுடன், டீநளவறநடி.டுமு யுறயசனள 2024 நிகழ்வில் 22 பிரிவுகள் மத்தியில் ஒட்டுமொத்த வெள்ளி விருதிற்கான கௌரவமும் **DFCC** வங்கிக்கு கிடைத்துள்ளதுடன், இலங்கையில் மிகவும் டிஜிட்டல் வழிமுறை கொண்ட மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய வங்கிகளுள் ஒன்று என்ற தனது ஸ்தானத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

# முதலிடத்தில் யூனிலீவர் ஸ்ரீ லங்கா



இலங்கையில் இளங்கலைப் பட்டதாரிகள் மத்தியில் மிகவும் விருப்பத்திற்குரிய தொழில் வழங்குனராக யூனிலீவர் ஸ்ரீ லங்கா தனது நிலையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஒரு சுயாதீன ஆராய்ச்சி நிறுவனத்தால் நடத்தப்பட்ட இந்த கருத்துக்கணிப்பில், யூனிலீவர் நிறுவனத்தை நம்பர் 1 தொழில் வழங்குனராக மாணவர்கள் அங்கீகரித்துள்ளனர்.

இளம் திறமையாளர்களை வளர்ப்பதனையும், தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பையும் இது சுட்டிக் காட்டுகிறது.

இலங்கையில் உள்ள தேசிய மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் முகாமைத்துவம், விஞ்ஞானம் மற்றும் பொறியியல் துறைகளை உள்ளடக்கிய இளங்கலை மாணவர்களிடையே தொழில் வழங்குனர் தெரிவு தொடர்பான ஆய்வு வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் இருந்து 360 இளங்கலை பட்டதாரிகளிடம் கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டது.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பான நிறுவனத்தின் முதலீடு, இளைஞர்கள் மத்தியில் வர்த்தகநாமம் பெற்றுள்ள இடம், தொழிலுக்கான வாய்ப்புகள் மற்றும் தொழில் வழங்கல் போன்ற காரணிகளின் அடிப்படையில் இலங்கையில் உள்ள நிறுவனங்கள் பற்றி ஆய்வில் கலந்து கொள்வோரின் கருத்துகள் இதன் போது மதிப்பீடு செய்யப்பட்டது.

# YOLO நவீன வீட்டு தொடர்மனை நகர் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்



இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளர்களான **Prime** குரூப், பெருமளவு எதிர்பார்ப்புகள் நிறைந்த **YOLO** செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது. கிரிபத்கொட நகரில் நிர்மாணிக்கப்படும் மிகப் பெரிய மற்றும் சொகுசான நவீன வீட்டு தொடர்மனை நகர் திட்டமாக இது அமைந்துள்ளது.

பிரத்தியேகமான வாழிட அனுபவத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்துடன், நிர்மாணப் பணிகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தன. கொழும்பு நகரின் வானுயர்ந்த கட்டிடங்களில் ஒன்றாக அமைந்திருக்கும் என்பதுடன், பிரத்தியேகமான சமூகத்தில் புதிய நியமங்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கும். **YOLO** செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் உயர் தர நிர்ணயங்களுக்கமையவும், நீடித்து நிலைத்திருக்கும் வகையிலும் முன்னெடுக்கப்படும்.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் **Prime** குரூப்பின் தவிசாளரும் இணை தலைமை அதிகாரியும், விசேட விருந்தினர்கள் மற்றும் எதிர்கால உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

**Prime Lands (Pvt) Ltd** இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ருமிந்த ரந்தெனிய இந்த செயற்திட்டம் தொடர்பில் குறிப்பிடுகையில், "**YOLO** திட்டத்துக்கான அடிக்கல் நாட்டலுடன், நிர்மாணப் பணிகளை நாம் ஆரம்பித்துள்ளோம். இலங்கையில் எதிர்கால நவீன வாழிட அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நோக்கத்தை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். நாம் வாக்குறுதியளித்தவற்றுக்கு அப்பால் சென்று மேலும் பல அம்சங்களை வழங்குவதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம். என்றார்.

# Fairway உடன் இணைந்து மேம்படும் இலங்கையின் அடுத்த சுற்றுலா மையம்



ஹொஸ்பிடல் வீதிக்கும் சதாம் வீதிக்கும் இடையில், டச்சு மருத்துவமனைக்குப் பின்னால் அமைந்துள்ள **Fairway Colombo** ஹோட்டல் ஆனது, இப்பிரதேசத்திற்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதில் முன்னணிப் பங்கை ஆற்றி வருகின்றது.

**Fairway Colombo Street Food Festival, Art and Jazz on the Street, Cultural Festival** போன்ற நிகழ்வுகளை **Fairway** நடத்துவதோடு, ஹொஸ்பிடல் வீதியை ஒரு விறுவிறுப்பான செயற்பாடுகளுடன் கூடிய கலாசார மையமாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு, சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை உணவுகளின் சுவைகளையும் கலைத்திறனையும் அனுபவிப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

உள்ளூர் விற்பனையாளர்கள், கலைஞர்கள், திறமை வெளிப்பாட்டாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பை அது எதிர்பார்க்கிறது.

இதன் மூலம், உலகம் முழுவதிலுமிருந்து வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலான ஈர்க்கக்கூடிய அனுபவத்தை உருவாக்க அது அழைப்பு விடுக்கிறது.

இது கொழும்பு கோட்டையை, முழு சமூகத்திற்கும் பயனளிக்கும் வகையில், இலங்கையின் சுற்றுலாத் துறையின் ஒரு முக்கிய தளமாக மேம்படச் செய்யும்.

# மக்கள் வங்கிக்கு ISO/IEC 27001:2022அங்கீகாரம்



தனது தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ கட்டமைப்பிற்காக **(Information Security Management System - ISMS)** பெருமதிப்புமிக்க **ISO/IEC** 27001:2022 சான்று அங்கீகாரத்தைப் பெற்றுள்ள முதலாவது உள்நாட்டு, கட்டமைப்பு ரீதியாக முக்கியமான வங்கி **(Domestic Systemically Important Bank - D-SIB)** மற்றும் இலங்கையிலுள்ள அரச வங்கியாக மாறியுள்ளது குறித்து மக்கள் வங்கி பெரும் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது.

தனது வாடிக்கையாளர்கள், தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் ஒட்டுமொத்த வங்கித் துறைக்காக, தரவுக் காப்பு, பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை குறித்த உயர் தரதரங்களைப் பேணுவதில் மக்கள் வங்கியின் அர்ப்பணிப்பை இந்த முக்கியமான சாதனை மைல்கல் காண்பிக்கின்றது. தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பில் அதிநவீன சர்வதேச தராதரத்தை **ISO/IEC** 27001:2022 பிரதிநிதித்துவம் செய்கின்றது. இந்த சான்று அங்கீகாரத்தை சம்பாதித்துள்ளதன் மூலமாக, பரிமாண மாற்றம் கண்டு வருகின்ற இணைய ஆபத்துக்களிலிருந்து பெறுமதிமிக்க தனது தகவல் சொத்துக்களைப் பாதுகாக்கும் வலுவான பாதுகாப்பு கட்டுப்பாட்டு நடைமுறைகளை அமுல்படுத்தும் தனது ஆற்றலை மக்கள் வங்கி நிரூபித்துள்ளது. வங்கியின் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள், தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் குறித்த விரிவான மதிப்பீட்டின் அடிப்படையில் இச்சான்று அங்கீகாரம் வழங்கப்படும் நிலையில், தகவல் பாதுகாப்பு மீது வலுவான அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

# Premier Club விருது வழங்கல்




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இரண்டாம் காலாண்டுக்கான தனது **Premier Club** விருதுகள் வழங்கும் வைபவத்தை நீர்கொழும்பு, அவென்ரா கார்டன்ஸ் ஹோட்டலில் முன்னெடுத்தது.

சிறப்பாக செயலாற்றியிருந்த ஆலோசகர்களின் சாதனைகளை கௌரவித்து வெகுமதியளிக்கும் வகையில் இந்நிகழ்வு அமைந்திருந்ததுடன், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஆலோசகர்களை ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்திருந்தது.

இந்த காலாண்டில், யூனியன் அஷ்யூரன்ஸ் **Premier Club** இனுள் 125 புதிய அங்கத்தவர்களை யூனியன் அஷ்யூரன்ஸ் உள்வாங்கியிருந்தது. அதனூடாக, உயர்மட்ட சேவைகளை பேணும் நிபுணர் அணியினை கட்டியெழுப்புவதற்கான தமது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்திருந்தது.

பணப் பரிசுகள், சொகுசு வாகனங்கள் மற்றும் விசேடத்துவமான பயிற்சித் திட்டங்கள் போன்ற வெகுமதிகளை பெற்றுக் கொடுக்கும் உயர்மட்ட கௌரவிப்பு கட்டமைப்பாக யூனியன் அஷ்யூரன்ஸ் **Premier Club** அமைந்துள்ளது.